

# மகாஜனா:
# மீண்டும் பொற்காலம் காண
# கை கொடுங்கள்!

# எங்கள் கல்லூரி
# மகாஜனக் கல்லூரி

இன்றைக்கு தொண்ணூற்று மூன்று ஆண்டுகளுக்கு முன் அன்னியர் ஆதிக்கத்தின் கெடுபிடிக்களுக்கும் சமய, கலாச்சார அழிவுகளுக்கும் எதிரான கருத்துக்களின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்டது எங்கள் கல்லூரியாகும். பாவலர் துரையப்பாபிள்ளையினால் ஸ்தாபிக்கப்பட்டு, அவரின் தலைமகன் திரு தெ து ஜயரத்தினத்தினால் வளர்த்தெடுக்கப்பட்டது எங்கள் கல்லூரி. ஒரு சிறிய கிராமத்துப் பள்ளிக்கூடம் நாட்டின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக மாறிய வரலாறு கொண்டது.

ஒரு காலத்தில் விவசாயிகளும் தொழிலாளிகளும் மாத்திரமே குடிகொண்ட எங்கள் கிராமத்தில் தான் வழங்கிய கல்வியினால், நாட்டின் சிறந்த அறிஞர்களையும் கல்விமான்களையும் உருவாக்கியதுடன் புகழ் பரப்பும் பல நூற்றுக் கணக்கான மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்ட வல்லுனர்கள், நிர்வாகிகள், அரசியலாளர்கள், சமூகசேவையாளர்கள் என உருவாக்கியுள்ளது. இலங்கையின் வேறு எந்தக் கல்லூரியையும் விட மிக அதிக எண்ணிக்கையில் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கலைஞர்களையும் உருவாக்கியது நம் கல்லூரி.

யாழ்ப்பாண மாவட்டத்தின் உதைபந்தாட்ட மன்னர்கள் நாம் என்ற பெருமை எங்களுக்கு உண்டு. பல்வேறு தடவைகள் சாம்பியனான நம் கல்லூரி, தொடர்ந்து எட்டு ஆண்டுகள் மாவட்டத்தின் உதைபந்தாட்ட சாம்பியன்களாகிய சாதனையுடன் இரண்டு தடவைகள் அகில இலங்கையிலும் சாம்பியன் பட்டங்களைச் சுவீகரித்தது, எங்கள் கல்லூரி. கொக்கி, கிரிக்கெட், உடற்பயிற்சி, மெய்வல்லுனர் போட்டிகள் என பல்வேறு துறைகளில் பல்வேறு சாதனைகளைப் புரிந்தது நம் கல்லூரி.
தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் அகில இலங்கைப் போட்டிகளில் முதற்பரிசு பெற்ற நாடகங்களை எங்கள் கல்லூரி தயாரித்துச் சாதனை புரிந்தது.

## வாருங்கள்! சேர்ந்து உதவுவோம்!!

நீண்ட இடைவெளியின் பின்பாக
கடந்த இரண்டு ஆண்டுகளாக
அம்பனையில் அமைந்துள்ள
சொந்த வளாகத்தில் எமது கல்லூரி
சேவையாற்றி வருகின்றது.
போரும் போரின் விளைவான அனர்த்தங்களும்
மாணவர்களுக்கான அனைத்து வசதிகளையும்
அழித்து விட்டன.
மகாஜனன்கள் என்று பெருமைப்படுகின்ற நாங்கள்
மகாஜனக் கல்லூரி தந்த வசதிகளைப் பயன்படுத்தி
எங்களை வளம்படுத்திக் கொண்டுள்ளோம்.
எங்களை வளம்படுத்திய கல்லூரியில்
இன்று கல்வி பயிலுகின்ற எங்களின் எதிர்காலச் சந்ததியும்
அவர்களுக்குக் கல்வியறிவூட்டுகின்ற இன்றைய ஆசிரியர்களும்
வசதிகள் எதுவுமற்ற சூழலில் வாழுகின்றார்கள்.

பழைய மாணவர்களாகிய நாங்கள்
இன்றைய மகாஜனாவின் அவசர தேவைகளை
உடனடியாகப் பூர்த்திசெய்யவேண்டும்.
அதன்பின் கல்லூரியை நவீன வசதிகளுடன்
சர்வதேசத்தரத்திற்குத் தக்கதாக மாற்ற வேண்டும்
இவைகளை ஒருங்கிணைத்து ஒரே திட்டமாக உருவாக்கும்
நோக்கில் வருகின்ற ஏப்பிரல் 19ம் திகதி கொழும்பில்
அனைத்துப் பழைய மாணவர் சங்கங்களும் சேர்ந்த
மகாஜன சர்வதேச மகாநாடு நடக்க உள்ளது

உங்களின் மனம் நிறைந்த, தாராளமான உதவியை
வேண்டுகின்றோம்


## Mahajana College Old Students Association – UK

13 Arcus Road, Bromley, Kent BR1 4NN


18 – 02 – 2003

தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரியின்

# அவசரத் தேவைகளும்
# நீண்டகாலத் தேவைகளும்

எதிர்வரும் நான்கு பக்கங்களிலும்
எங்கள் கல்லூரியின்
அவசர தேவைகளும்
நீண்டகாலத் தேவைகளும் உள்ளன.
இவைகளை நிறைவுசெய்ய
அதிகளவு நிதி தேவைப்படுகின்றது.

இவற்றில் சிலவற்றை
நீங்கள் பொறுப்பெடுத்துச் செய்யமுடியும்.
உங்கள் குடும்பத்தின்
ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து
உங்களுக்கு விருப்பமானவர்களின்
நினைவாக இவற்றைச் செய்யலாம்.

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
முழு விபரங்களைப் பெற்று
கல்லூரியை வளம்படுத்த வாருங்கள்

| | | |
|---|---|---|
| 1 | **Education:** | ***Extra classes*** / Tuition for Advanced level students<br>***Extra Teachers***<br>***Special Programme*** to teach English language from year three |
| *2* | **Education** | ***Physics Lab***<br>***Chemistry Lab***<br>***Botany Lab***<br>***Zoology Lab***<br>**Science Lab** for O/L Students<br>***Home Science Lab***<br>***Other Work Shops*** ( Ex: wood work , Clay work ) |
| 3 | **Education** | ***Music Room***<br>minimum size of two room<br>all Instruments<br>Extra Facilities<br>***Dance Room***<br>Large Room with a Small Stage<br>Instruments<br>Separate Changing rooms for Girls & boys<br>***Drama Theatre***<br>Large Room with a Stage<br>Instruments<br>Separate changing rooms for Girls & Boys |

| | | |
|---|---|---|
| 4 | **Computer Studies** | **Computer Centre with modern equipment** |
| 5 | **Agriculture Studies** | ***Space for Garden***<br>Instruments & Facilities<br>***Space for Farming***<br>Instruments & Facilities |
| 6 | **Video Centre** | **Video Centre**<br>with all the facilities for 80 children to watch films, sports and Science Video |
| 7 | **Children** | ***Children Activity Centre***<br>***Children Park*** சிறுவர் பூங்கா |
| 8 | **Library** | ***Library***<br>Shelves<br>Books<br>Table + Chairs |
| 9 | **Sports** | ***Ground***<br>Improvements to the Present ground<br>Sports Room ( Instruments & Equipment)<br>Changing room for Girls + washing facilities<br>Changing room for Boys + washing facilities |

| | | |
|---|---|---|
| **10** | **Literature** | ***Publishing*** |
| | | ***Print the 'MAHAJANAN'*** <br> ( every 2 year period) <br> ***Printing facilities*** for Students |
| **11** | **Staff's Room** | Staff room with modern toilets, TV and Radio |
| **12** | **Scout's and Guide's Rooms** | |
| **13** | **Toilets for Children** | |
| **14** | **Canteen** | |
| **15** | **Book Shop** | |
| **16** | **Buildings** | ***Repairs & Renovation*** <br> Roof of the each and every buildings has to be checked and repaired |
| **17** | **கல்லூரி முன்றல்** | துரையப்பாபிள்ளை மண்டபத்தின் முன் பாவலரினதும் மகாஜன சிற்பியினதும் முழு உருவச் சிலைகளை நடுவில் கொடிக் கம்பத்துடன் நிறுவுதல் <br> முன் பக்கத்தின் முழு இடங்களையும் அழகான பூங்காவாக மாற்றுதல் |
| **18** | **Hostels**: | One For Boys <br> One For Girls |
| **19** | **Mahajana International Trust** | |
| | | An International Trust to be formed to manged all our funds. |

Members of the Trust including Principal Vice Principal and one member from each OSA

**20 FUNDS**

To create a **common fund** (Permanent) Bank interest can be used for the following needs

a. School Administration & Maintenance

b. ***Functions:***

* Founders Day & Prize Giving
* Jayaratnam Day & Prize Giving

- Sports Meet
- Nadesar Kovil Poojas & .......
- Maviddapuram Festival
- Thirkkethheswaram Festival
- Sports activities ( Football, Cricket,......)
- Extra Activities

---

**மகாஜன நூற்றாண்டு விழா / Mahajana Centenary Celebrations**

* To create a **International Centenary Committee** to organise this event

- To Build a sports Stadium in front of the School with facilities of International standard + an Auditorium for Cultural events
- This complex has to be managed by Local OSA

# Tellippalai
# Mahajana College
# International Conference

On

Saturday 19th April 2003

9 am to 6 pm

at

## Taj Samudra

Galle Road, Galle Face

Sri Lanka

Organised by

## The Principal

## Old Students Associations

Of

Tellippalai

Colombo

Australia – Melbourne


Austrlia - Sydney

Canada

France

&

United Kingdom



திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை

தீரமுற்று திருவடைந்த
தெய்வதுரை யப்பரது
தீர்க்கமாக தியானமதில்
தேறிவந்த மகாஜனா

– புலவர் நா. சிவபாதசுந்தரம் –

# எங்கள் ஊர் தெல்லிப்பழை

அறிவுத் துறையில் யாழ்ப்பாணத்தில் மிகவும் நெடிய வரலாறு கொண்டது தெல்லிப்பழை. எனினும் கல்வி சாதாரண மக்களுக்குரியதாக அல்லாது வசதிபடைத்தவர்களுக்குரியதாகவே நீண்ட காலம் இருந்தது. அமெரிக்க மிசனறி யாழ்ப்பாணத்தில் காலூன்றியபோது தெல்லிப்பழையையே தமது முக்கியமான பயில் நிலமாகத் தெரிந்தனர். பெண்களுக்கும் ஆண்களுக்குமான இலங்கையின் முதலாவது ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் ஆங்கிலப் பாடசாலையையும் அவர்கள் தெல்லிப்பழையிலேயே நிறுவினார்கள்.

ஆயினும் சைவமரபில் ஊறியிருந்த சாதாரண மக்களிடம் எந்தப் பாதிப்பையும் இவை ஏற்படுத்தவில்லை. இதற்கும் நூறாண்டுக்குப் பின்னர் நிறுவப்பட்ட எமது கல்லூரியை திரு தெ.து. ஜயரத்தினம் அவர்கள் பொறுப்பெடுத்த பின்னரே கல்வி சாதாரண ஏழை விவசாய மக்களின் சொத்தாகியது.

மகாஜனக் கல்லூரியினாலேயே புகழ்பெற்ற கிராமம் தெல்லிப்பழை. புகழும் உயர்வும் பெற்ற பின்பும் கிராமிய மணத்தினையும் பண்புகளையும் இன்னமும் கொண்டுள்ள அழகிய கிராமம். நீண்ட வரலாறுகள் கொண்ட பல சின்னப் பள்ளிக்கூடங்களையும், மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய இரண்டு பெரிய கல்லூரிகளையும் கொண்டது. வரலாற்றுப் புகழ்கொண்ட மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை சிவன் கோவில், என்பவற்றுடன் புகழ்பெற்ற துர்க்கை அம்மன் கோவிலையும் கிராமங்களுக்கேயுரிய பல சிறு கோவில்களையும் வணக்கத்தலங்களையும் கொண்டது.

நல்ல நீருடன் கூடிய, தனித்தனியே ஆண்களுக்கும் பெண்களுக்குமான நீச்சல் குளங்களை கொண்டது நம் கிராமம். இலங்கை முழுமைக்கும் சேவையாற்றிய கூட்டுறவு வைத்தியசாலையுடன் மிகப் பெரியதான அரசினர் வைத்தியசாலையும் தன்னகத்தே கொண்டது.


COLLEGE